


# மாற்றம்
# மாற்றம்

ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**
ஆல் பீப்பிள் சர்ச் & வேர்ல்டு அவுட் ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு
விநியோகிக்கப்பட்டது, பெங்களூர், இந்தியா.
தற்போதைய பதிப்பு: 2023

**தகவல் தொடர்புக்கு**
All Peoples Church & World Outreach,
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore - 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: **bookrequest@apcwo.org**
Website: **apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டவை. 1982ல் தாமஸ் நெல்சன் Inc., என்பவரால் © காப்புரிமை பெறப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்குதாரர்கள்**
ஆல் பீப்பிள் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து apcwo.org/give என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள "ஆல் பீப்பிள் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்" என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**
**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்:** apcworldmissions.org

(Tamil - Change)

# மாற்றம்

# பொருளடக்கம்


1. மாற்றம்—தேவையான செயல்முறை 1

2. நமது நோக்கங்கள் மற்றும் விருப்பங்களில் மாற்றம் 4

3. நமது சிந்தனை, மனப்பான்மை, பேச்சு மற்றும் நடத்தையில் மாற்றம் 7

4. எதிர்பாராத மாற்றங்களுக்கு ஆயத்தமாக இருத்தல் 10

5. மாற்றம்—முன்னேற்றம் மற்றும் பெருக்கத்திற்கு அவசியம் 13

6. மாற்றத்தை உண்டாக்கும் ஆவியானவர் 14

# 1
# மாற்றம்—தேவையான செயல்முறை

மாற்றம்! நம்மைச் சுற்றிலும், காரியங்கள் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றன. உலகம் முழுவதிலும் சமூகம், அரசியல், பொருளாதாரம் மற்றும் பல விஷயங்களில் மாற்றங்களை நாம் காண்கிறோம். காரியங்கள் எப்போதும் அப்படியே இருப்பதில்லை. "இன்று உலகில் நிலையான ஒன்று இருக்கிறது, அதுதான் மாற்றம்!" என்ற ஒரு பொதுவான பழமொழி உண்டு. "மாற்றம்" என்ற சொல் ஒரு நிகழ்வையோ அல்லது ஒரு செயல்முறையையோ குறிக்கிறது. இது காரியங்கள் தற்போது உள்ளவற்றிலிருந்து வேறுபட்டதாக இருக்கும் நிலையைக் குறிக்கிறது.

ஒரு கிறிஸ்தவனுக்கும் கூட மாற்றம் என்பது மிகவும் முக்கியம்! நமது கிறிஸ்தவ வாழ்க்கை மனந்திரும்புதலுடன் தொடங்கியது, முக்கியமாக இது, பாவம் மற்றும் சாத்தானை விட்டு ஜீவனுள்ள தேவனிடத்திற்கு நேராக தன் இருதயத்தையும் மனதையும் திருப்புவதாகும். அந்த நேரத்தில், தேவன் நம் உள்ளான மனதை மாற்றினார். நாம் மறுபடியும் பிறந்தோம்! நாம் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகளானோம். ஒரு நொடியில், தேவன் நம் ஆவியில் ஒரு சிருஷ்டிப்பின் கிரியையைச் செய்தார், அது நம்மை இருளிலிருந்து வெளிச்சத்திற்கும், சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து கிறிஸ்துவுக்குள் சுதந்திரமாக வாழும்படிக்கு வழி நடத்தியது கிறிஸ்தவ வாழ்க்கை என்பது மாற்றத்தின் தொடர்ச்சியான செயல்முறையாகும். *"தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு"* (ரோமர் 8:29அ) தேவன் நம்மை ஏற்கனவே முன்குறித்திருக்கிறார். தொடர்ச்சியான மாற்றத்தின் செயல்முறையின் மூலம், நாம் இப்போது இருக்கிற இப்படிப்பட்ட நிலையிலிருந்து முழுமையாக கிறிஸ்துவைப்போல மாறுகிறோம். கர்த்தர்தாமே எக்காள சத்தத்துடன் பரலோகத்திலிருந்து இறங்கி வரும்போது, *"ஒரு இமைப்பொழுதிலே, ... நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்"* (1 கொரிந்தியர் 15:51,52) என்று சொல்லப்பட்டுள்ள அந்த மாற்றத்தின் மகத்தான நாளைக் காண நாம்

காத்துக்கொண்டிருக்கிறோம். சாவுக்கேதுவானது சாவாமையை அணிந்துகொள்ளும். *"... நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்"* (1 யோவான் 3:2ஆ).

கிறிஸ்துவில் நம் வாழ்க்கை ஒரு உடனடி மாற்றத்தின் நிகழ்வுடன் தொடங்கி, மாற்றத்தின் மற்றொரு உடனடி நிகழ்வோடு முடிவடைகிறது. எனினும், இந்த இரண்டு நிகழ்வுகளுக்கும் இடையே மாற்றம் என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாக இருக்கிறது. இந்தப் புத்தகம் அந்தக் காரியத்தைப் பற்றிப் பேசுகிறது மற்றும் இந்தத் தொடர்ச்சியான மாற்றத்தின் செயல்பாட்டில் தீவிரமாக ஈடுபடுவதற்கு நம்மை ஊக்குவிப்பதையே முதலாவது நோக்கமாகக் கொண்டுள்ளது. நம் வாழ்வில் மாற்றத்தின் செயல்முறைக்கு உட்பட்டிருக்க வேண்டிய பகுதிகளையும் கூட நாம் கருத்தில் கொள்வோம்.

2 **கொரிந்தியர்** 3:18

**நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்** (மாற்றமடைகிறோம்).

நம்முடைய கவனம் கர்த்தர் மீது இருந்தால், நாம் அவருடைய சாயலாக மாறுவது தவிர்க்க முடியாத ஒரு விளைவாகும். உண்மையிலேயே, நாம் எவ்வளவு அதிகமாக அவரை நெருங்கி, அவருடைய மகிமையைப் பார்க்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நம் வாழ்வில் மாற்றிக்கொள்ள வேண்டிய பகுதிகளை அடையாளம் காணத் தொடங்குகிறோம். நாம் *"மறுரூபமாகிறோம்"* என்று மேலே உள்ள வசனம் நமக்குச் சொல்கிறது. (இந்த நிகழ்வு-நிகழ்காலத்தில் தொடர்ச்சியாக நடந்துகொண்டிருக்கிறது என்பதைக் குறிக்கிறது.) நாம் மாற்றமடைவதால், நாம் மகிமையின் மேல் மகிமையடையும்படி முன்னேறுகிறோம். எனவே மாற்றம் என்பது ஒரு மண்டலத்திலிருந்து அடுத்த மண்டலத்திற்குச் செல்வதற்கு அவசியமான ஒரு செயலாகும். இதுவே ஆவிக்குரிய வளர்ச்சி அல்லது முன்னேற்றத்தைக் கொண்டுவருகிறது. மாற்றம் இல்லாமல் எந்தவித ஆவிக்குரிய வளர்ச்சியும் நடைபெற முடியாது, ஏனெனில் வளர்ச்சியே மாற்றத்தின் செயல்முறையாக இருக்கிறது. தம்முடைய பிள்ளைகளில் எவரும் நீண்ட காலத்திற்கு அதே ஆவிக்குரிய நிலையில் இருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தம் அல்ல

என்று நாங்கள் நம்புகிறோம். மாறாக, நாம் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நாம் தேக்கமடைந்து ஒரே நிலையில் நிற்பதை தேவன் விரும்புவதில்லை.

நமது ஆவிக்குரிய வாழ்க்கையைப் பொறுத்தவரையில், மாற்றம் என்பது அவசியமானது மட்டுமல்ல, நமது அனுதின வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் அது வெளிப்படையாக இருக்க வேண்டும். நமது, நடத்தை, அறிவு, திறன்கள், திறமைகள், நிதிகள், திட்டங்கள், இலக்குகள் மற்றும் இவற்றைப் போன்ற பல காரியங்களில் மாற்றத்தை நாம் வரவேற்க வேண்டும். நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் *"மகிமையின் மேல் மகிமையடயும்படி"* செல்ல ஒரு உறுதியான மற்றும் புத்திசாலித்தனமான முயற்சி இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, கல்வி, வாழ்க்கை, குடும்பம், தொழில் மற்றும் ஊழியம் போன்ற பூமியில் நம் வாழ்வின் ஒவ்வொரு விவரத்திலும் தேவன் அக்கறையுள்ளவராக இருக்கிறார். இந்த ஒவ்வொரு பகுதியிலும், நாம் எப்போதும் உயர்ந்த மற்றும் சிறந்த காரியங்களை எதிர்நோக்கிச் செயல்பட வேண்டும்.

உதாரணமாக, நீங்கள் ஒரு வெற்றிகரமான மருத்துவராக இருந்தால், நீங்கள் அதில் சிறந்து விளங்க இன்னும் முயற்சி செய்யலாம். அணுக முடியாத அல்லது சிகிச்சை எடுத்துக்கொள்ள வழியில்லாதவர்களுக்கு மருந்தைக் கொண்டு சேர்க்க உதவும் புதிய வழிகளைப் பற்றி நீங்கள் சிந்திக்கலாம். இதற்கு முன் உங்கள் திட்டத்தின் ஒரு பகுதியாக இல்லாத விஷயங்களைச் செய்ய நீங்கள் நினைக்கலாம். ஒரு மாணவராக, உங்கள் அறிவையும் செயல்திறனையும் மேம்படுத்த நீங்கள் முயற்சி செய்யலாம். ஒரு இல்லத்தரசியாக, உங்கள் குடும்பத்திற்கு நீங்கள் வழங்கும் கவனிப்பு மற்றும் ஆறுதலின் தரத்தை மேம்படுத்த முயற்சி செய்யலாம். ஒரு ஊழியராக, நீங்கள் உங்கள் பிரசங்கக் கலை மற்றும் பிரசங்க நுணுக்கத்தை மேம்படுத்த முயற்சி செய்யலாம். இருப்பினும், இவை ஒவ்வொன்றும் நாம் "மாற்றிக்கொள்ள" தயாராக இருந்தால் மட்டுமே சாத்தியமாகும். பின்வரும் அத்தியாயங்களில், மாற்றத்தின் சில பகுதிகளை நாம் கருத்தில் கொள்வோம்.

# 2
# நமது நோக்கங்கள் மற்றும் விருப்பங்களில் மாற்றம்

**சங்கீதம்** 51:10
**தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான** (சரியான) **ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.**

நமது உள் நோக்கங்களும் விருப்பங்களும் மிகவும் முக்கியமானவை. மிகவும் ஆவிக்குரிய மற்றும் நல்ல எண்ணம் கொண்ட ஒரு கிறிஸ்தவர் கூட ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் தவறான உள்நோக்கத்தையோ அல்லது விருப்பத்தையோ கொண்டிருக்கலாம் என்பதை நாம் உணர வேண்டும். அத்தகைய தீமைக்கு எதிராக நம்மில் யாரும் தானாகவே தடுத்து நிறுத்தப்படுவதில்லை. மாறாக, இவைகளுக்கு எதிராக நாம் தொடர்ந்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். *"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்"* (நீதிமொழிகள் 4:23) என்று கர்த்தர் அறிவுறுத்துகிறார். நமக்குள் இருக்கும் தவறான நோக்கங்களால் நம் இருதயங்கள் சிறைபிடிக்கப்பட்டுப் போய்விடாமல் பாதுகாக்கும் பொறுப்பு நமக்கு உண்டு. நாம் நம்முடைய இருதயங்களை ஆராய்ந்து, அப்படிப்பட்ட நோக்கங்களும் விருப்பங்களும் உண்மையிலேயே உள்ளன என்பதை உணர்ந்து கொள்வதில் தவறொன்றும் இல்லை. இது முக்கியமானதும் மாற்றத்திற்கான முதல் படியுமாகும். நம்மை நாமே சோதித்துப் பார்க்கும்படி வேதாகமம் திரும்பத் திரும்ப சொல்கிறது.

1 **கொரிந்தியர்** 11:28
**எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்.**

1 **கொரிந்தியர்** 11:31
**நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்.**

2 கொரிந்தியர் 13:5
**நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்.**

## ஊழியத்தில் நோக்கங்கள்

தவறான நோக்கங்களையும் விருப்பங்களையும் நாம் கொண்டிருப்பதை அங்கீகரித்து, அவற்றை ஒப்புக்கொண்டு, நம்மை மாற்றும்படி கர்த்தரிடத்தில் கேட்க வேண்டும். *"தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்"* (சங்கீதம் 51:10) என்று தாவீது ஜெபித்ததைப்போல ஜெபியுங்கள். தனிப்பட்ட முறையில், நம் சொந்த வாழ்வில், நாம் ஜனங்களுக்கு ஊழியம் செய்யும்போது, வெவ்வேறான பகுதிகளில் தவறான நோக்கங்களுக்கு எதிராக நாம் தொடர்ந்து நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். “நான் ஏன் இதைச் செய்கிறேன்? என் நோக்கம் என்ன? என் உள்ளான ஆசை என்ன?" என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட இடத்தில் நாம் ஊழியம் செய்ய அழைக்கப்பட்டிருந்தால், நம் இருதயங்களைத் தயார்படுத்தி, அங்கே செல்வதற்கு ஒரு தெளிவான உந்துதலைக் கொடுக்கும்படி கர்த்தரிடத்தில் கேட்க வேண்டும். அவர்கள் நம் ஊழியத்திற்குக் கொடுக்கக் கூடிய காணிக்கையின் மீது கவனம் செலுத்துவதிலிருந்து நாம் நம் இதயங்களைக் காத்துக்கொள்ள வேண்டும். தேவனுடைய அன்பு மற்றும் வல்லமையின் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை நாம் விரும்பும்போது, "தேவனால் மிகவும் அபிஷேகம்பண்ணப்பட்ட ஊழியராக" அங்கீகரிக்கப்பட விரும்பும் ஒரு மறைமுக நோக்கத்திலிருந்து நம் இருதயங்களை நாம் காத்துக்கொள்ள வேண்டும். நாம் ஊழியத்தில் வளர முற்படுகையில், நம்முடைய சொந்த "ஊழியம்" அல்லது "ராஜ்யத்தை" மேம்படுத்துவதற்காக இப்படி விரும்புவதிலிருந்து நம் இருதயங்களைக் காத்துக்கொள்ள வேண்டும். இது "தேவனுடைய ஊழியம்," "நம்முடைய ஊழியம் அல்ல," இது "தேவனுடைய ராஜ்யம்," "நம்முடைய ராஜ்யம் அல்ல" என்பதை நாம் தொடர்ந்து நினைவில்கொள்ள வேண்டும்.

ஊழியத்தில் விழிப்புடன் இருப்பதன் முக்கியத்துவத்தை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளேன், ஏனென்றால் நம்முடைய நோக்கங்களும் விருப்பங்களும் நம் வாழ்க்கையில் பல விஷயங்களைத் தீர்மானிக்கின்றன மற்றும் அதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, தேவன் நம் வெளிப்புற பாவனை மற்றும் செய்கைகளுக்கு அப்பாற்பட்டு நம்மை கவனிக்கிறார். *"மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன். மனுஷன் முகத்தைப் பார்ப்பான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்"* (1 சாமுவேல் 16:7ஆ). தேவன் உள்ளான மனுஷனில் உண்மையிருக்க வேண்டும் என்று விரும்புகிறார் (சங்கீதம் 51:6). உங்கள் நோக்கங்கள் மற்றும் விருப்பங்களைத் தொடர்ந்து கண்காணிக்கவும். அவை சரியாக இல்லை என்றால், கர்த்தரிடம் சென்று, உங்களை மா-ற்-று-ம்-ப-டி கேளுங்கள்!!

# 3

# நமது சிந்தனை, மனப்பான்மை, பேச்சு மற்றும் நடத்தையில் மாற்றம்

ரோமர் 12:2அ
**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், ... உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.**

எபேசியர் 4:23
**உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி** (மனப்பான்மை),

1 தீமோத்தேயு 4:12
**உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.**

கர்த்தர் நம் சிந்தனையிலும் மனப்பான்மையிலும் மாற்றத்தைக் காண விரும்புகிறார். *"உங்கள் மனம் புதிதாகிறதினாலே"* (ரோமர் 12:2) என்பது, நமது கண்ணோட்டங்கள், மனப்பான்மைகள் மற்றும் நாம் சிந்திக்கும் விதம் ஆகியவற்றில் மாற்றம் இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. இதற்கு பல பரிமாணங்கள் உள்ளன. நாம் "உலகப்பிரகாரமாக நினைப்பதை" அல்லது "உலகப்பிரகாரமான" மனப்பான்மையைக் கொண்டிருப்பதை மாற்றிக்கொண்டு, தேவனுடைய சிந்தைகளையும் மனநிலைகளையும் கொண்டிருக்க வேண்டும். நாம் "தாழ்வாக" சிந்திப்பதிலிருந்து விடுபட்டு, தேவ வார்த்தைக்கு ஏற்ப விசுவாசத்தின் நிலைப்பாட்டில் இருந்தும் சிந்திக்க நமது தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும். நம்மில் சிலர் நமது அவநம்பிக்கையிலிருந்து விடுபட வேண்டும், அந்த எதிர்மறையான எண்ணம் ஆகிய "செய்ய முடியாது" என்ற மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டும், மற்றும் தேவன் மீது வைக்கும் எளிய விசுவாசத்தின் மூலம் கிடைக்கும் மிகப்பெரிய சாத்தியக்கூறுகளைப் பார்க்க ஆரம்பிக்க வேண்டும். நம்மில் சிலர், "பழைய வழியில்" காரியங்களைச் செய்வதில் மிகவும் பழக்கப்பட்டிருப்பதால், கர்த்தர் தாமே செய்ய விரும்பும்

"புதியதும் புதுமையானதுமானவைகளை" நாம் ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை. நமது மத பழக்கவழக்கங்களும் மரபுகளும் நம் சிந்தனையில் நம்மைக் கட்டிவைத்திருக்கின்றன, நமக்குக் கற்பிக்கப்பட்ட வழியைத் தவிர வேறு வழியில் தேவனால் அவற்றைச் செய்ய முடியாது என்று கருதுகிறோம்.

வேறு சிலருக்கு ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் மாற்றத்தைக் காண வேண்டும் என்ற மிகச் சிறிய கனவுகளும், மிகக் குறைவான ஆர்வமும் தெளிவற்ற தரிசனமும் உள்ளன. நாம் பெரிய அளவில் கனவுகளைக் காண வேண்டும், தேவனுக்காக நிறைய சாதிக்க வேண்டும் என்று ஆசைப்பட வேண்டும், மேலும் உலகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் தரிசனங்களைக் கொண்டிருக்க வேண்டும். நம்மில் சிலர்—தோல்வி, தோற்கடிக்கப்படுதல், ஊக்கமின்மை அல்லது பேரழிவு போன்றவற்றை அனுபவித்ததன் நிமித்தமாக—அக்கறையின்மை, நம்பிக்கையின்மை அல்லது விரக்தி நிலையில் விழுந்திருக்கிறோம். உந்துதல், உற்சாகம், முன்னேற்றம் மற்றும் பெருக்கத்திற்கான முயற்சி எதுவும் இல்லாமல் இருக்கிறோம். நமது ஒத்துழைப்பில் சிறிதளவு மட்டுமே நாம் அவருக்குக் கொடுக்க தயாராக இருந்தால் அவையெல்லாவற்றையும் தேவனால் மாற்ற முடியும்!! சிலர் வெறும் சோம்பேறிகளாகவும், விஷயங்களைப் பற்றி அறிவதில் மிகவும் பின்தங்கியவர்களாகவும், மிகவும் சோர்வானவர்களாகவும் இருக்கலாம். நமது மனப்பான்மையில் ஒரு அதிரடி மாற்றம் தேவை!! காரியங்களை சிலர் நிரந்தரமாகத் தள்ளிப்போடுபவர்களாய் இருக்கிறார்கள், அப்படிப்பட்டவர்களுக்கு மாற்றம் தேவை. சிலர் "திட்டமிடுபவர்களாகவும்" "பேசுபவர்களாகவும்" இருக்கிறார்கள், ஆனால் "கலப்பையில் தங்கள் கைகளை வைக்கமாட்டாதவர்களாய் இருக்கிறார்கள்;" இதையும் மாற்றிக்கொள்ள வேண்டியது அவசியமாகும். சிலர் பயம், பெருமை, கசப்பு அல்லது தேவனுக்குப் பிரியமில்லாத பிற குணநலன்களால் கட்டப்பட்டிருக்கிறார்கள், மேலும் அதை மாற்றிக்கொள்வதை அவர் காண விரும்புகிறார். நம் பேச்சிலும் நடத்தையிலும் நம்மை மேன்மையான நிலைக்கு உயர்த்த தேவன் விரும்புகிறார். நமது பேச்சும் நடத்தையும் ஒரு விசுவாசிக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

தனிப்பட்ட முறையில், நம் சொந்த வாழ்க்கையில் உள்ள, தவறான எண்ணங்கள் அல்லது மனப்பான்மைகளைப் பற்றி நாம் அறிந்துகொள்ளும்போது, நாம் கர்த்தரிடத்தில் சென்று, அவருக்கு

முன்பாக அவற்றை ஒப்புக்கொண்டு, அவர் நம்மை மாற்றும்படி ஜெபிக்க வேண்டும். பல வருடங்கள் கர்த்தரோடு நடந்தாலும் கூட, நம் வாழ்வில் மாற்றப்பட வேண்டிய பகுதிகளை நாம் இன்னும் உணர முடிகிறது. உங்கள் சொந்த வாழ்க்கையில், "கர்த்தாவே, இது என் வாழ்க்கையில் மாறுவதை நான் பார்க்க வேண்டும்?" என்று சொல்லக்கூடிய விஷயமாகிய, நீங்கள் தேவனிடம் கொண்டுவர விரும்பும் மனப்பான்மை மற்றும் சிந்தனை முறைகளை உங்களால் உணர முடிகிறதா?

# 4
# எதிர்பாராத மாற்றங்களுக்கு ஆயத்தமாக இருத்தல்

**யோவான் 3:8**
**காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது: ஆவியினாலும் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்."**

ஆவியானவரால் பிறப்பது எல்லாவற்றையும் முழுமையாக விளக்க முடியாத ஒரு வாழ்க்கைக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. சில விஷயங்களுக்கு அப்படியே அடிபணிந்து அனுபவிக்க வேண்டும். கர்த்தராகிய இயேசு ஆவியானவரால் கொண்டுவரப்பட்ட புதிய பிறப்பை, தான் விரும்பும் இடத்தில் வீசும் காற்றுக்கு ஒப்பாக்கினார். அதை நாம் அனுபவிக்க மட்டுமே செய்கிறோம். அதன் சரியான தோற்றமோ அல்லது இலக்கோ நமக்குத் தெரியாது. மேலும், ஆவியானவரின் பல கிரியைகளை நம்மால் முழுமையாக விளக்க முடியாது. அவர் என்ன செய்தார் என்பதை நாம் அனுபவித்து மட்டுமே அறிவோம். கர்த்தர், சில சமயங்களில், நம் வாழ்வில் நாம் முற்றிலும் எதிர்பாராத நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் ஏற்பாடு செய்யலாம், இதுபோன்ற சம்பவங்களை நாம் சந்திக்க நேரிடும் என்ற முன்னறிவு நமக்கு இருக்காது. அவை நமது திட்டங்களின் ஒரு பகுதியாக இருக்கவில்லை. இருந்தபோதிலும், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து "காற்று வீசும் திசையில் செல்வதே" ஞானமான காரியம். கர்த்தர் நம் வாழ்வில் கொண்டுவரும் எதிர்பாராத மாற்றங்களை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கக் கற்றுக்கொள்வது மிகவும் முக்கியமாகும். இவை நம் வாழ்வின் திருப்புமுனையாக அமையலாம்.

## எங்கள் ஊழியத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

எதிர்பாராத மாற்றங்களைப் பயன்படுத்தி, தேவன் எங்களுக்காக வைத்திருந்தவற்றிற்கு எங்களை அழைத்துச் சென்ற பல

நிகழ்வுகளை என் மனைவியாகிய எமி அவர்களாலும் என்னாலும் விவரிக்க முடியும். 1995 ஆம் ஆண்டில், எனது தந்தை அமெரிக்காவிற்கு ஒரு வணிகப் பயணமாகச் சென்றிருந்தார், அவர் ஒரு நாள் இரவு தங்கி நான் வசித்த நியூ ஜெர்சியில் அமைந்துள்ள நியூ பிரன்சுவிக்கில் என்னைச் சந்திக்க முடிவு செய்திருந்தார். ஒரு நாள் சனிக்கிழமையன்று வந்த அவர், மறுநாள் மாலை கிளம்புவதாகத் திட்டமிட்டிருந்தார். எனது தந்தை எப்போதுமே ஒரு ஆப்பிரிக்க அமெரிக்க திருச்சபைக்குச் செல்ல விரும்பினார், ஏனெனில், அவர் அவர்களது பாடல் மற்றும் ஆராதனை முறையை அனுபவிக்க விரும்பினார். அங்கே, எங்கள் வசிப்பிடத்திற்கு அருகில் ஒரு ஆப்பிரிக்க அமெரிக்க திருச்சபை இருந்தது, அதனால் நாங்கள் ஞாயிற்றுக்கிழமை காலை அங்கே சென்றோம். அந்த மாதிரியான உற்சாகமான, தன்னிச்சையான பாடலை நான் இதற்கு முன் பார்த்ததோ அல்லது அனுபவித்ததோ இல்லை. அது மிகவும் சத்தமாக இருந்தது, கிட்டத்தட்ட காது கேளாமற் போனதைப் போல இருந்தது, மற்றும் கட்டிடம் கீழே விழுவதைப்போல் தோன்றியது! குறைந்தபட்சம் அது எனக்கு அப்படித் தோன்றியது! அதுவரை, நான் பல்கலைக்கழகத்தில் கொரிய அமெரிக்க சகோதர சகோதரிகளுடன் பணிபுரிந்து நெருங்கிய ஐக்கியங்கொண்டிருந்தேன். நாங்கள் துதிப்பதில் சுதந்திரத்தை அனுபவித்தோம், ஆனாலும், நான் அங்கு கண்டதுபோல் எதுவும் இல்லை. அப்போது என் மனதில் ஆயிரம் எண்ணங்கள் ஓடின. ஆராதனையில் அப்படிப்பட்ட சுதந்திரம் சரியானது என்று எனக்குள் ஆழமாகத் தெரிந்தது. நான் எப்போதும் கர்த்தருக்குத் துதியையும் ஆராதனையையும் வெளிப்படுத்த சுதந்திரமாக இருக்க விரும்பினேன். ஆனால் இந்த ஆப்பிரிக்க அமெரிக்க திருச்சபையில் என்ன நடக்கிறது என்பதை ஒப்பிடுகையில், நான் ஒரு செங்கல் சுவரை விட கடினமானவனாக இருப்பதாகத் தோன்றியது. பின்னர் அன்றைய தினம் நான் தனியாக இருந்தபோது, நான் மிகவும் குழப்பமடைந்தேன். என் மனதிற்குள் ஒரு பகுதி, “ஆண்டவரே, நான் அங்கு திரும்பிச் செல்ல விரும்பவில்லை. என்னால் ஒருபோதும் அவர்களைப்போல் இருக்க முடியாது. மேலும் என்னால் சத்தத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாது" என்று சொன்னது, என் மனதிற்குள் இன்னொரு பகுதி, “ஆண்டவரே, அவர்களிடம் இருப்பதை நான் உண்மையில் விரும்புகிறேன்—உம்மை ஆராதிப்பதற்கு அந்த மாதிரியான விடுதலை வேண்டும்” என்று சொன்னது. சரி, சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், நான் அங்கே திரும்பவும்

சென்றேன், எமி என்னுடன் சேர்ந்ததும், நாங்கள் ஒன்றாகச் சென்றோம். கொஞ்ச நாட்களில், அந்தத் திருச்சபையில் ஊழியம் செய்வதற்கான வாய்ப்புகள் எனக்கு வழங்கப்பட்டன, நாங்கள் ஒவ்வொரு வாரம் புதன்கிழமை இரவும் ஊழியம் செய்தோம். அத்தகைய அற்புதமான ஆப்பிரிக்க அமெரிக்க சகோதர சகோதரிகளை எங்களால் அங்கு சந்திக்க முடிந்தது. அங்கு வந்திருந்த ஸ்பானிய மொழி பேசும் தம்பதிகளான மானுவல் மற்றும் டானியா ஆகியோரையும் நாங்கள் சந்தித்தோம். பின்னர், அவர்கள் நிலைநாட்டிக்கொண்டிருந்த ஹிஸ்பானிக் திருச்சபையில் ஊழியம் செய்ய நாங்கள் அழைக்கப்பட்டோம். விரைவில், நாங்கள் ஹிஸ்பானிக் திருச்சபையின் வாழ்க்கையில் அநேக காரியங்களைப் பகிர்ந்துகொள்ள ஆரம்பித்தோம். மானுவலும் டானியாவும் ஒவ்வொரு வாரமும் எங்களுடன் தேவனுடைய வார்த்தையைப் படிப்பதற்காக நேரத்தைச் செலவிட்டனர். ஹிஸ்பானிக் திருச்சபையில் இசை ஊழியத்தில் எமி உதவினார், அவர்களின் உதவியுடன் நாங்கள் நவம்பர் 1996ல் ஈக்வடாருக்குச் சென்று ஊழியம் செய்தோம்!

நியூ பிரன்சுவிக்கில் என் தந்தையின் ஒரு இரவு தங்கியதன் தொடர் எதிர்வினையாக வந்த அனைத்தையும் பாருங்கள்!! எதிர்பாராத ஒன்றா? நிச்சயமாகவே!! நாங்கள் திட்டமிட்டோமா? நிச்சயமாக இல்லை!! ஆவியானவரின் காற்று வீசும் திசையில் செல்ல நாங்கள் கற்றுக்கொண்டோம். ஆப்பிரிக்க அமெரிக்கர்களுக்கோ அல்லது ஹிஸ்பானிக் சமூகத்தினர்களுக்கோ நாங்கள் ஊழியம் செய்வோம் என்று நாங்கள் ஒருபோதும் கற்பனை செய்ததில்லை. அவர் எங்கு நடத்த விரும்புகிறாரோ, அங்கெல்லாம் நாங்கள் செல்வோம்!! உங்கள் வாழ்க்கையில் தேவன் கொண்டுவர விரும்பும் எதிர்பாராத மாற்றங்களுக்கு ஆயத்தமுள்ளவர்களாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாகவும் இருங்கள்.

# 5
# மாற்றம்—முன்னேற்றம் மற்றும் பெருக்கத்திற்கு அவசியம்

**யோவான் 12:24**
**மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்.**

நாம் மகிமையின் மேல் மகிமையடையும்படி "மாறப்பட்டுள்ளோம்." எனவே, இன்று நாம் அனுபவிக்கும் மகிமையின் நிலையிலிருந்து அடுத்த நிலைக்குச் செல்ல, முதலாவதாக நாம் மாற்றப்பட வேண்டும். நம்மைத் தேங்கி நிற்கும் நிலையில் வைத்திருக்கும் மற்றும் நமது முன்னேற்றத்தைத் தடுக்கும் விஷயங்களான நமது நோக்கங்கள், மனப்பான்மைகள், நடத்தை அல்லது பேச்சு போன்றவை மாற்றப்பட வேண்டும். இந்த விஷயங்கள் நம் வாழ்வில் இருக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும் மற்றும் தேவனுடைய உதவியால், அவை மாறுவதை நாம் பார்க்க வேண்டும். அந்த ஒரு *"கோதுமை மணி"* தானியத்தோடு அடையாளப்படுத்தப்பட்டவர்களாக இன்று நாம் எங்கே இருக்கிறோம் என்பதைக் கருத்தில் கொள்ளலாம். *"மிகுந்த பலனைக்கொடுக்கும்"* அந்த நிலைக்கு நாம் செல்ல விரும்பினால், முதலில் *"நிலத்தில் விழுந்து" "மரித்து"* அதன் பின்னர் *"மிகுந்த பலனைக்கொடுக்கும்."* இது நம்மில் ஏற்படும் மாற்றத்தின் பரிணாமத்தை குறிக்கிறது. நாம் முதலில் தரையில் விழ வேண்டும், அதற்கு மனத்தாழ்மை அவசியம். நாம் மாற்றப்பட வேண்டும் என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதற்கு நமக்கு தாழ்மை தேவை. நாம் சுயத்திற்கு மரிக்க வேண்டும். இது சில நேரங்களில் வலிமிகுந்த செயல்பாடாக இருக்கலாம். அதற்குப் பின்பு நாம் அடுத்த கட்ட மகிமைக்கு உயர்த்தப்படுவோம், இவ்வாறு, முன்னேற்றத்தையும் பெருக்கத்தையும் அனுபவிப்போம்.

# ௬
# மாற்றத்தை உண்டாக்கும் ஆவியானவர்

**ஆதியாகமம் 1:1-3**

**1 ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.**

**2 பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின்மேல் இருள் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்.**

**3 தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று.**

கர்த்தருடைய ஆவியானவர் நம்மை மகிமையின் மேல் மகிமையடையும்படி நம்மை மாற்றுகிறார். பரிசுத்த ஆவியானவர் மாற்றத்திற்கான காரணராய் இருக்கிறார். பூமி உருவமற்றதாகவும், வெறுமையானதாகவும், இருள் நிறைந்ததாகவும் இருந்தது. ஆனாலும், தேவ ஆவியானவர் ஜலத்தின் மீது அசைவாடிக்கொண்டிருந்தார். *"வெளிச்சம் உண்டாகக்கடவது"* (ஆதியாகமம் 1:3) என்ற வார்த்தைகளை தேவன் உச்சரித்தார், மேலும் தேவனுடைய வல்லமையுள்ள பரிசுத்த ஆவியானவர் இருளின் மத்தியில் வெளிச்சத்தைக் கொண்டுவந்தார். இந்த சிருஷ்டிக்கும் மற்றும் மறுசீரமைக்கும் வார்த்தைகளைப் பேச தேவன் ஆயத்தமாக இருந்த நேரத்தில், இந்த உருவமற்ற, இருண்ட மற்றும் வெறுமையான பூமியின் மீது தேவ ஆவியானவர் அசைவாடிக்கொண்டிருந்தது மிகவும் குறிப்பிடத்தக்கது. பரிசுத்த ஆவியானவர் மாற்றத்தின் ஆவியானவர் என்று நாம் உறுதியாக விசுவாசிக்கிறோம். அவர் மாற்றத்தையும் மறுரூபமாகுதலையும் கொண்டு வருபவராய் இருக்கிறார். பூமியின் மேற்பரப்பு மீட்டெடுக்கப்பட்டபோது அவர் அதை மிகப் பெரிய அளவில் செய்தார் (ஆதியாகமம் 1). அப்படியானால், நாமும் கூட அவருடைய பார்வைக்கு உகந்தவர்களாக இருக்கும்படி, தேவனுடைய மகிமையை நமக்குள் செலுத்துவதன் மூலமும், நம்மை மாற்றுவதன் மூலமும் அவர் நம்மீது கிரியை செய்வார் என்று நாம் எவ்வளவு அதிகமாக எதிர்பார்க்கலாம். நாம் எந்த அளவிற்கு அவருக்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோமோ அந்த

அளவிற்கு மட்டுமே அவர் நம்மில் கிரியை செய்கிறார். பரிசுத்த ஆவியானவருக்கு உங்கள் இருதயத்தைத் திறவுங்கள். அவருக்கு முன்பாக உங்களை அர்ப்பணித்து, உங்களை மாற்றும்படி அவரிடம் கேளுங்கள். உங்கள் வாழ்க்கையில் மாற்றப்பட வேண்டிய பகுதிகளைக் கையாள உதவுமாறு நீங்கள் அவரிடம் கேளுங்கள்.

## தேவனுடைய வார்த்தை மாற்றத்தை ஏற்படுத்துகிறது

தேவனுடைய சிருஷ்டிப்பு மற்றும் மறுசீரமைப்பு பணியில், பரிசுத்த ஆவியானவர் பூமியில் அசைவாடினது மட்டுமல்லாமல், இருள் மற்றும் வெறுமையின் மீது தேவனுடைய வார்த்தை பேசப்பட்டது (ஆதியாகமம் 1). அவ்வாறாக, ஆவியும் வார்த்தையும் சேர்ந்து நம் வாழ்வில் மாற்றங்களைக் கொண்டுவருகின்றன. உங்கள் இருதயத்தையும் மனதையும் தேவனுடைய வார்த்தைக்குத் திறந்து வையுங்கள். அதை நீங்களே வாசித்துத் தியானியுங்கள், தேவனுடைய வார்த்தை உங்கள் வாழ்க்கையில் உருமாற்றம் ஏற்படுத்தும் வல்லமையை வெளிப்படுத்தத் தொடங்கும்.

# ஒரு ஜெபம்

கர்த்தாவே, என்னை மாற்றும்!

*அன்பின் பிதாவே,*

*நான் இயேசுவின் நாமத்தில் உம்மிடம் வருகிறேன். கர்த்தாவே, என் வாழ்க்கையில் மாற்றப்பட வேண்டியவை என்று நான் உணரும் விஷயங்கள் உள்ளன. கர்த்தாவே, உமது வார்த்தையின் வல்லமையினாலும், உமது ஆவியினாலும் என்னை மாற்றும். நான் இப்போது இருக்கும் இடத்திலிருந்து நீர் விரும்பும் இடத்திற்குச் செல்ல விரும்புகிறேன். நான் எப்படி இருக்க வேண்டும் என்று நீர் விரும்புகிறீரோ நான் அப்படியே ஆக விரும்புகிறேன். எனக்காக நீர் வைத்து வைத்திருக்கும் அனைத்தையும் நான் பெற விரும்புகிறேன். ஆண்டவரே, என் இருதயத்தையும் என் மனதையும் மாற்றும். எனது நோக்கங்கள், எனது மனப்பான்மைகள், எனது பேச்சு மற்றும் நடத்தையை மாற்றும். தேவனுடைய காரியங்களில் நான் முன்னேறுவதற்கும் பெருகுவதற்கும் தடையாக இருக்கும் காரியங்களிலிருந்து விடுபட எனக்கு உதவுவீராக.*

*ஆமென்.*

# உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார்.

**ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால், அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத்

தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம் (கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** **(ரோமர் 6:23).** இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார்—உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது—அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

***"… அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்"*** **(அப்போஸ்தலர் 10:43).**

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்"*** **(ரோமர் 10:9).**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக. ஆமென்.*

# ஆல் பீப்பிள் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும்** ஒரு திருச்சபையும், ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- ஒரு **குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **ஒரு மேம்படுத்தும் ஒருமையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- **ஒரு உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

நல்ல இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், தேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்து ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள் நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, apcwo.org/locations ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது contact@apcwo.org க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

## இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God's Word—The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses–Don't Take Them
Open Heavens
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Speaking in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work Its Original Design

புதிய புத்தகங்கள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. PDF, ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய apcwo.org/books என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு apcwo.org/sermons என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் கவுன்சிலிங்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் கவுன்சிலிங்கானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில் ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

| | |
|---|---|
| **இளம் பிராய நடத்தை** | **நடத்தையில் சீர்கேடு** |
| **பிறரோடு இணைக்கக் குறைபாடு** | **ஆளுமை குறைபாடு** |
| **உறவுமுறை சவால்கள்** | **உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்** |
| **கல்வியில் பின்தங்கிய நிலை** | **மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி** |
| **தொழில் தொடர்பான பிரச்சினைகள்** | **மது / போதைப்பொருளுக்கு அடிமை** |
| **குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்கு பின்** | **ஆவிக்குரிய போராட்டங்கள்** |
| **பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்** | **வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை** |

கிரிசலிஸ் கவுன்சிலிங் சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்காண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**Website: chrysalislife.org**

**Phone:** +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998

**Email: counselor@chrysalislife.org**

கிறிசலிஸ் கவுன்சிலிங் என்பது ஆல் பீப்பிள் சர்ச் ரூ வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிள் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள் ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை “ஆல் பீப்பிள் சர்ச்”க்கு காசோலை/ வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்:** All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்:** 50200068829058
IFSC **குறியீடு:** HDFC0004367
**வங்கியின் பெயர்:** HDFC Bank, 7M/308 80 Feet Road, HRBR Layout, Kalyan Nagar, Bengaluru, 560043, Karnataka, India

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிள் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள்*

*சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* **apcwo.org/give** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.

**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**


## DOWNLOAD THE FREE APP!

*Search for*

**"All Peoples Church Bangalore"**
**in the App or Google play stores.**

Available on the App Store

ANDROID APP ON Google play







***A daily 5-minute video devotional.***
***A daily Bible reading and prayer guide.***
***5-minute Sermon summary.***
***Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.***
***Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.***

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# ஆல் பீப்பிள் சர்ச் வேதாகமக் கல்லூரி

apcbiblecollege.org

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள் சர்ச் வேதாகமக் கல்லூரியில் (APC-BC), ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், **திங்கள் முதல் வெள்ளி வரை,** இந்திய நேரப்படி **காலை** 9:00 **முதல் நண்பகல்** 12 **மணி வரை** (UTC+5:30) வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்: apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில் விண்ணப்பிக்கவும்,** மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

பாவத்தையும் சாத்தானையும் விட்டுவிலகி ஜீவனுள்ள தேவனிடத்திற்கு நேராகத் திரும்பும்படி, நமது இருதயத்திலும் மனதிலும் ஏற்படும் மாற்றத்துடன்தான் நமது கிறிஸ்தவ வாழ்க்கை தொடங்கியது. அந்த நேரத்தில், தேவன் நமது உள்ளான மனதை மாற்றினார். நாம் மறுபடியும் பிறந்தோம்! நாம் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகளானோம். ஒரு நொடியில்: தேவன் நம்மை அந்தகாரத்திலிருந்து வெளிச்சத்திற்குக் கொண்டுவந்த ஒரு சிருஷ்டிப்பின் கிரியையைச் செய்தார், அது சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு கிறிஸ்துவில் சுதந்திரமாக வாழும்படி நம்மை அழைத்து வந்தது. கிறிஸ்துவில் நம் வாழ்க்கை ஒரு உடனடி மாற்றத்தின் நிகழ்வோடு தொடங்கி, மாற்றத்தின் மற்றொரு உடனடி நிகழ்வோடு முடிவடைகிறது. இருப்பினும், இந்த இரண்டு கருத்துக்களுக்கு மத்தியில், இது ஒரு தொடர்ச்சியான மாற்றத்தின் செயல்முறையாக இருக்கிறது, மேலும் இந்தத் தொடர்ச்சியான மாற்றத்தில் நாம் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு, இந்தப் புத்தகம் பெரிதும் நம்மை ஊக்குவிக்கிறது.

**All Peoples Church & World Outreach**
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org